# சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

சண்டிலிப்பாய் நடுக்குறிச்சி கல்வளை வீதியில் கல்வளை விநாயகர் கோவிலுக்கு அருகாமையில் அகம்படியான் தறை (மேற்கு வளவு) என்ற 13 பரப்பு முழுவதும் அல்லது பிரித்தும் விற்பனைக்கு உண்டு. மின்சார வசதி உள்ள இடம். விபரங்களுக்கு: கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல. 5332 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5332

மானிப்பாய் மத்திய ஸ்தானத்தில் அதிகாரி செல்லமுத்து வீதியில் அரசினர் வைத்திய சாலையை அடுத்து சந்தை. பாடசாலை பிரதான பஸ் பாதை ஆகியவற்றிற்கு அருகாமையில் 22 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. விபரங்களுக்கு: எஸ். சோமசுந்தரம், இணைர் வளவு, மானிப்பாய். 5353

பலசரக்குக் கடைக்குத் தேவையான கண்ணாடி அலுமாரி, சோகேஸ்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: 286, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 5343

யாழ்ப்பாணம், சேர். பொன் இராமநாதன் வீதியில் வாழ். வளாகத்திற்கு எதிராகமூன்று பரப்பு நீள் சதுரக்காணி கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி, புகையிரத நிலையம் ஆகியவற்றில் இருந்து 5 நிமிட நடைதூரம். தொடர்பு கொள்க: 65, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். 5311

### கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம், பொது அறிவு, ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுப்பார்கள் பெண்களுக்கு மட்டும் மத்திய ஸ்தலத்தில் இலவச ஆங்கிலக் கல்வி கற்றுக்கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 5212. C/o. ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 5212

### வகுப்புகள்

யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தில் பின்வரும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. G. C. E. O. L. A. L. கலை, வர்த்தகம், விஞ்ஞான வகுப்புக்கள், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல், வங்கியல், ஆங்கிலம் I. C. M. A, A. C. C. A. City and Guilds Engineering London காலையிலும் மாலையிலும், சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் வெவ்வேறு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 1978-ம் ஆண்டுக்குரிய A. L. வகுப்புக்கள் H.N.C.E., N. C. G. E. வகுப்புக்கள் 2-2-77-ல் ஆரம்பமாகும். விடுதி வசதியுண்டு. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். பஸ் வண்டி நிலையத்திலிருந்து 80 யார் தூரத்தில். சாந்தி படமாளிகைக்கு முன்னால் உள்ளது. 5352

### பயிற்சி

வெளிநாடுகளில் வேலைபெற ஏற்ற பயிற்சிகள் மேல்நாடுகளில் பயிற்சி பெற்றவர்களால் நடாத்தப்படும். வெல்டிங் (Electric and Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor). தொழில் புரிவோருக்கு விசேஷ மாலை நேர வகுப்புகளும் உண்டு. National Institute of Engineering Technology, மைதி மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5298


## ஜெனிவா—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய அபாயம் எதிர்நோக்குவது என்பதை லெபருன் நிகழ்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன என்றும் ஏகாதிபத்தியத்தின் 'நல்ல பணிகளை' அரபு தேசபக்தர்கள் நம்பத்தயாராக வில்லை. லெப்ரேச, அலக்ஸாண்ரியா மற்றும் எகிப்திய நகரங்களில் ஏற்பட்டுள்ள மக்கள் கலவரம் இதைக் காட்டுகிறது என்றும் இது மேலும் கூறுகிறது. (ஸ்ரீ)


யாழ்ப்பாண மாநகர
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

## கேள்வி விண்ணப்பம்

எமது மின்தறி ஆலையின் உற்பத்திப் பொருளாகிய இறே பவ்லின் (Grey Poplin) கேள்விப் பத்திரத்தின் மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் விலை விபரங்களைக் குறித்து 4-2-'77க்குப் பிந்தாமல் சங்கக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொதுமுகாமையாளர்.
74/3, அல்பிரட் துரையப்பா வீதி.
யாழ்ப்பாணம். 5357

# திருமண அழைப்பு

மணமகன்
செல்வன் நடேஸ்வரன்
மணமகள்
செல்வி கிருஷ்ணவேணி

இடம்: ரசிக ரஞ்சன சபா மண்டபம்
மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

காலம்: 30—1—77 ஞாயிற்றுக்கிழமை
காலை 7-30 — 9-00 மணி வரை

நடைபெறும் திருமண வைபவத்தில் குடும்ப சமேதராய் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

திருமதி ப. சின்னத்துரை
25, செல்லப்பிள்ளை வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு திருமதி இல்லையம்பலம்
243, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
5329


## லஞ்சக் குற்றம்

வாஷிங்டன், ஜன. 27

தென்கொரிய மத்திய உளவு நிறுவனத்தின் ஏஜன்டுடமிருந்து அமெரிக்காகாங்கிரஸில் 40—50 உறுப்பினர்கள் அமெரிக்காவில் லஞ்சம் பெற்றுள்ளனராம்.

இத் தகவலை செனட் குடியரசுக் கட்சியின் சிறுபான்மைத் தலைவரான ஹோவார் பாக்கர் டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் தெரிவித்தார். [ஸ்ரீ]

## மார்ச் 14க்கு—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

18 தொகுதிகளில் ஆண்களிலும் பார்க்க பெண் வாக்காளர்களே அதிகமாக உள்ளனர். பழனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, வெகெங்கை திருச்செந்தூர் முதலான 18 தொகுதிகளில் பெண் வாக்காளர்களே கூடுதலாக இருக்கின்றனர்.

### கூடியதும் குறைந்ததும்

தமிழ்நாட்டில் திருச்செங்கோடு தொகுதிதான் லோக்சபா தொகுதிகளில் அதிக வாக்காளர்களைக் கொண்டதாகும். 8 லட்சத்து 17 ஆயிரத்து 423 வாக்காளர்கள் இத்தொகுதியில் உள்ளனர். ஆகக் குறைந்த வாக்காளர் தொகைகொண்டதொகுதி தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரியாகும். இத்தொகுதியில் 5 லட்சத்து 82 ஆயிரத்து 827 வாக்காளர்களே உள்ளனர்.

சென்னையில் உள்ள மூன்று லோக்சபா தொகுதிகளிலும் உள்ள மொத்த வாக்காளர் தொகை 23 லட்சத்து 83 ஆயிரத்து 526 என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மாநில அரசுகள் வாக்குச்சாவடிப் பட்டியல்களை வெளியிட்டுவருகின்றன.

குஜராத் மாநில மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி தமது நிலை குறித்து நாளை கூடி ஆராயவிருக்கின்றது. (ஸ்ரீ)


### கந்தோர் வசதி

கொழும்பில், நவீன வசதிகளுடனும், சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளரின் சேவையுடனும் கந்தோர் வசதி உண்டு. விரும்புவோர் விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 5354
மே/பா ஈழநாடு
யாழ்ப்பாணம். 5354

மிருசுவில்
கிராமசபை

## கேள்விப் பத்திர விண்ணப்பம்

மிருசுவில் கிராமசபையால் பின்வரும் வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. இச்சபையில் வழங்குநர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 8-02-1977-ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். 9-02-1977-ம் திகதி காலை 9-00 மணிக்கு முன்பு கேள்வி விண்ணப்பங்கள் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மேலதிக தகவல்களை இக்காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

1. வடக்கு மிருசுவில் வீதி.

ஒப்பம்:
கந்தையா
குலசேகரம்பிள்ளை J.P.
அக்கிராசனர்
கிராமசபை மிருசுவில்.

கிராமசபை அலுவலகம்
மிருசுவில்.
27-01-1977. 5356


## யாழ் லயன்ஸ் களியாட்டு விழா

# பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

யாழ். லயன்ஸ் களியாட்டு விழாவையொட்டி பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

பெப்ரவரி நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் இவ்விளையாட்டுப்போட்டிகளை யாழ். லயன்ஸ் கழகத்தின் இளைஞர் கழகமான யாழ். லியோ கழகத்தினர் நடாத்துவார்கள்.

இப்போட்டியில் உதைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் உட்பட பல விளையாட்டுகள் இடம்பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை திரு. த. யுகேந்திரராஜா தலைமையிலான குழுவினர் செய்து வருகின்றார்கள். திருவாளர்கள் ஏ. யோசெபஸ்ரீதாசன், ஜெ. இம்மனுவேல், அ. ராஜேந்திரா, க. க. ஜேருட், ம. அலோசியஸ், மா. சவிரிமுத்து, இ. துரைசிங்கம், ச. சத்தியசீலன் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவ்விளையாட்டுப் போட்டிக்கான விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்படவிருக்கிறது.

இப்போட்டிகள் பற்றிய விபரங்களை த. யுகேந்திரராஜா, குழுத்தலைவர், 38, நக்காவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## லயன்ஸ்கிளப் கலந்துரையாடல்

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழை லயன்ஸ்கிளப்பின் ஆதரவில் இம்மாதம் 9-ம் திகதி இரவு தெல்லிப்பழையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெறஉள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதம விருந்தினராக லயன்ஸ்கிளப் கவர்னர். ஏ. வர்ணகுலசூரிய கலந்துகொள்கிறார். (க)

## லயன்ஸ் கழக இலவச வைத்திய சோதனை

யாழ்ப்பாணம், சனி

லயன்ஸ் கழகத்தின் தெல்லிப்பளை கிளை உறுப்பினர்கள் இன்று (29-ம் திகதி) வீமன்காமம் இளைஞர் சங்கத்தினரின் உதவியுடன் இளைஞர் சங்க மண்டபத்தில் இலவச வைத்திய பரிசோதனைகளை நடத்தவிருக்கிறார்கள்.

இக்கழகம் சமூக சேவையை நோக்கமாகக் கொண்டு ஆரம்பித்துள்ளது. மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்கும் திட்டத்தில் முதல் கட்டமாகும் இது.

இதன் இரண்டாவது திட்டமாக சுகாதார வைத்திய அதிகாரியுடன் சம்பந்தப்பட்டு ........ அமைத்துக்கொடுக்கவும் மூன்றாவது திட்டமாக தெல்லிப்பழை வைத்தியசாலையிலிருந்து வெளியாகும் அசுத்த நீரை வேறுபாதையால் அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இவற்றுடன் மேலும் பல சமூகநலத் திட்டங்கள் பற்றி மேற்படி கழகத்தினர் ஆலோசித்து வருகின்றது.


# யாழ். லயன்
# களியாட்டு விழா-77
## பிரவேசக் கூப்பன்

நிகழ்ச்சி ....................................
[பெரிய எழுத்துக்களில்]

பெயர் ....................................

விலாசம் ....................................

வயது ....................................

விளையாட்டுப் போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக் கொள்வேன்.

....................................

போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்தவேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்குபற்றுவதில் எமக்கு ஆட்சேபனையில்லை.

பெற்றோர் அல்லது பாதுகாவலர்
ஒப்பம்

....................................

∴ விளையாட்டுப் போட்டிகளுக்கான நிபந்தனைகளும், மற்றும் விபரங்களும், ஈழநாடு வாரமலரில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும். அத்துடன் விழா இணைச்செயலாளர் திரு இ. ஆர். ஜோசெப், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், என்ற விலாசத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

ராஜா
யாழ். நகர்
3-வது வெற்றி வாரம்
ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
தாய்க்கு ஒரு பிள்ளை

ரஜனி
[யாழ்-நகர்]
ஜெய்சங்கர் லக்ஷ்மி
ஜெயா முத்துராமன்
நடித்த
தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம்
கனிமுத்து பாப்பா

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா—ஜெயசுதா—நாகேஷ்
நம்பியார் நடித்த
மன்னவன் வந்தானடி
(ஈஸ்ட்மன் கலர்)

லிடோ [யாழ்.நகர்] தினசரி 4 காட்சிகள் போன்: 7693
ஏ. வி. எம். ராஜன்-லதா
நடித்த
வீட்டுக்கு வந்த மருமகள்

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்ட்மன் கலர்)

# பசுமாட்டைத் திருடியதாக மூன்று பேர் பொலிசில்

மாவிட்டபுரம், வெள்ளி

காணிக்குள் நின்ற பசுமாட்டைத் திருடிச் செல்ல முயன்ற மூன்று பேரில் ஒருவர் அக் காணிக்காரரிடம் வசமாக மாட்டிக்கொண்டனர். தப்பியோடிய மற்றைய இருவரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கீரிமலையைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகையா என்பவரது 400 ரூபா பெறுமதியான பசுமாடு அவரது காணிக்குள் கட்டப்பட்டிருந்தது. இந்த மூன்று பேரும் அதைத் திருடிச் செல்ல முயன்ற சமயம் அவ் வழியால்வந்த அழகர் குழந்தைவேல் என்பவர் இவர்களிடம் விசாரித்தபோது பிரஸ்தாப மாட்டை விலைக்கு வாங்கிச் செல்வதாகக் கூறினர்களாம்.

இதையடுத்து வேறு ஒரு மாடு விற்பவர்களுள்ளதாகக் கூறி அவர்களை மாட்டுடன் மேற்படி மாட்டுச் சொந்தக்காரரிடம் கூட்டிச் சென்று விசாரித்த சமயம் இவர்களது திருட்டு முயற்சி அம்பலமாகவே இருவர் தப்பியோடிவிட்டனராம்.

அகப்பட்டுக்கொண்ட கட்டுவனைச் சேர்ந்த முருகேசு சச்சிதானந்தம் என்பவர் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து இது குறித்து விசாரணையில் ஈடுபட்ட காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் கே. செல்வப்பிரகாசம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி கட்டுவனைச் சேர்ந்த சின்னத்துரை நாகேந்திரம், சுப்பிரமணியம் பரமேஸ்வரன் ஆகிய நபர்களைக் கைது செய்தது. (ஈ)

வெஸ்லி (காங்கேசன்துறை)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
அவன் ஒரு தொடர்கதை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி: 3-30, 6-30, 9-30
சனி,ஞாயிறு 10-30
சிவகுமார்-ஜெயசித்ரா
தங்கத்திலே வைரம்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்—ஜெயசித்ரா
பந்தாட்டம்

# நைஜீரியாவுக்கு பயணமானார்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. அ. [illegible] நைஜீரியாவுக்கு விரிவுரையாளராகக் கடமையாற்றச் சென்றுள்ளார்.

இவர் தமிழர் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இளைய சகோதரராவார். (ஈ)

## கோரிக்கை

பண்டத்தரிப்பு, வெள்ளி

புங்குடுதீவு, நயினாதீவு பொதுமக்களின் நலன் கருதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையொன்றை குறிகட்டுவானில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜச் செயலாளர் திரு. எஸ். கே. சண்முகலிங்கம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரை கடிதமூலம் வேண்டியுள்ளார்.

# கணவர் மரணமானதால் மனைவியும் தற்கொலை

மாவிட்டபுரம், வெள்ளி

கணவர் காலமானதை யடுத்து தனிமையில் வாழ முடியாது கஷ்டப்பட்டுவந்த இளம்மனைவி ஒருவர் நஞ்சருந்தித் தமது உயிரை மாய்த்துக் கொண்டார்.

அச்சுவேலியைச் சேர்ந்த வெங்கடசுப்பிரமணியம் புவனேஸ்வரி (31 வயது) என்னும் பெண்மணியின் மரணவிசாரணையிலேயே மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

இம் மரணவிசாரணையை திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. கே. உலகநாதன் நடத்தினசமயம் காலமானவரின் தந்தை வேலுப்பிள்ளை, சகோதரி இராசம்மா ஆகியோர் அளித்த சாட்சியங்களிலிருந்து காலமானவரின் கணவர் கடந்த 4 மாதங்களுக்குமுன் காலமானதாகவும் காசநோயினால் பீடிக்கப்பட்டிருந்த மனைவி தனிமையில் வாழமுடியாது கஷ்டப்பட்டதாகவும், மனமுடைந்து தாம் சாகப்போவதாகக் கூறிவந்ததாகவும், சம்பவதினம் சகோதரி வீட்டில் வைத்து காலமானவர் நஞ்சருந்தியதாகவும் முதலுதவிகள் அளித்தும் அவரைக் காப்பாற்ற முடியவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

அவரது மரணத்திற்கு நானே காரணம் என காலமானவரால் எழுதப்பட்ட கடிதமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. இறுதியில் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை தீர்ப்பு வழங்கினார்.

காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த எம். எஸ். எம். யதுாரின் சாட்சியை ஆஜர் செய்தார். (ஈ)

## என்னைத்—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

புஷ்பவல்லி சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது: எதிரி என்னைப் போத்தியபோது ஒரு மாதிரி விடுவித்துக்கொண்டு முதல் நான் இங்கே தங்கம் பிடுங்கியவன் தான் இவன் என்றேன். என்னைத் தள்ளியதும் நான் விழுந்தேன். அவர் சூட்கேசுடன் ஓடினார். இன்னுமொருவர் கூட ஓடினார். அவரைத் தெரியாது. மகளின் உடுப்புகள் அதில் இருந்தன.

விசாரணை பெப்ரவரி 14-ம் தேதிக்கும் பின்போடப்பட்டது. [க.ஈ]

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ வலி. வடக்குக் கிளையின் ஆதரவில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிச் சாம்பியன் போட்டிகள் பெப்ரவரி 5-ம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளன.

இச்சாம்பியன் போட்டியில் 1-ம் பிரிவில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகமும் ஊறணி புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகமும் மோத உள்ளன. 2-ம் பிரிவில் அளவெட்டி முற்போக்கு வாலிபர் சங்கமும் வீமன்காமம் இளைஞர் சனசமூக நிலையமும் மோத உள்ளன.

இவ்விறுதிப் போட்டிகளில் பிரதம அதிதிகளாக காங்கேசன்துறைப் பட்டின சபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. பி. முருகையா ஆகியோர் கலந்து கொள்வர். [ஈ]

வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் ★ ஸ்ரீவித்யா
★ சுந்தரராஜன் ★ ஜெயசுதா ★ நாகேஷ்
நடித்த K. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள்

யாழ் - மனோஹரா திரையில்



தினசரி 5 காட்சிகள்
75-ம் ஆண்டு சென்னை நகரில்
105 நாட்களுக்குள் 19 லட்சத்து
வசூல் பெற்ற ஒரே படம்!
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
கட்டழகி
ராதாசலூஜா
வெண்ணிற ஆடை
நிர்மலா
பி. எஸ். வீரப்பா
எஸ் வி சுப்பையா
தேங்காய் சீனிவாசன்
கண்ணன், ராமதாஸ்
பண்டரிபாய்
நடித்த
சத்யா மூவிஸ்
★ இதயக்கனி ★
ஈஸ்ட்மன் கலர்)

Regal (Jaffna) Daily at 4-45, 7, & 9-30. p. m.
FRANKIE HOWERT in
UP POMPEII
(Color-Sex Comedy)

RIO (Jaffna) Last few days
(The Story of Freedom Fighters)
PARTIZANS
From 1-2-77
Action Packed War drama
Walter Defends Sarajevo

